# ஜாமக்காரன்
# JAMAKKARAN

(**ஜாமக்காரனில்**) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள். 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 5** **Reg No.TNBIL/2016/70171** **ISSUE - 4**
**APRIL 2021 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**


Mob.: No. **9894261333** இந்த எண் - **SMS** உபயோகத்துக்காக மட்டும்
0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



ஜாமக்காரன்
JAMAKKARAN




கர்த்தருக்குள் அன்பானவர்களே,

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

சுமார் 1½ வருடத்துக்கு பிறகு **வெளிநாடுகளில்** வாழும் **ஜாமக்காரன் வாசகர்களுக்கு** மூன்று மாத ஜாமக்காரன் ஒரே கவரில் வைத்து பல ஆயிரக்கணக்கான வாசகர்களுக்கு அனைத்து நாடுகளுக்கும் அனுப்பினேன்.

சுமார் ஒரு மாதம் கழித்து **ஒவ்வொரு நாடுகளிலிருந்தும்** Email வழியாகவும் **தொலைபேசி** வழியாகவும் ஜாமக்காரன் தங்களுக்கு கிடைத்த விவரத்தை **பெரும் மகிழ்ச்சியுடன்** அறிவித்தார்கள். **விமான சேவை** நின்று போனதால் 1½ வருடமாக ஜாமக்காரன் வெளிநாடுகளுக்கு அனுப்ப இயலாமல் போனது. பலர் டாக்டர் **உயிரோடு இருக்கிறாரா** ! என்று சந்தேகப்பட்டு ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டதாகவும், **கடித போக்குவரத்து** மூலம் உலகின் எந்த பாகத்துக்கும் தொடர்புகொள்ள இயலாததால் யாரைக்குறித்தும் **தகவல் அறிய** இயலாமல் போனது. ஆனால் பல நாடுகளிலுள்ள வாசகர்கள் எனக்காக கூடி ஜெபித்து இருக்கிறார்கள் என்பதை அறிந்து கர்த்தரை துதிக்கிறேன்.

2021 ஏப்ரல் மாத்திலிருந்து இந்தியாவிலிருந்து உலக நாடுகளுக்கு

**விமானசேவை** மறுபடியும் நிறுத்தப்பட்டுள்ளது. விமான சேவை தொடங்கிய உடன் 162 நாடுகளுக்கும் (தமிழ் & மலையாளம்) **ஜாமக்காரன்** Air Mail வழியாக அனுப்பப்படும். வெளிநாடுகளில் வாழும் ஜாமக்காரன் வாசகர்களுக்காக விசேஷமாக ஜெபிக்கிறேன். உங்களுக்கு ஜாமக்காரன் கிடைக்காமல் போனாலும் **www.jamakaran.com** என்ற website மூலமாக அனைத்து ஜாமக்காரனையும் நீங்கள் வாசித்து பயன் பெறலாம்.

## பயங்கரமும் – ஆறுதலும்

**கொரோனா கிருமியின்** 3வது அலை மிக கோரமாக உலக முழுவதும் பரவிக்கொண்டிருக்கிறது. கொரோனா வியாதியால் தாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் **மரித்தவர்களின்** எண்ணிக்கையும் உலக நாடுகள் எல்லாவற்றையும்விட **இந்தியாவில் தான்** மிக அதிகம் என்று உலக மருத்துவ விஞ்ஞானிகளின் கணக்கு கூறுகிறது.

கொரோனா பரவிய 2020 **பெப்ரிவரி மாத** ஆரம்ப காலத்தில் உலகிலேயே **இத்தாலி** தேசத்தில்தான் **சாவு எண்ணிக்கை** மிக அதிகம். அதே நிலை இப்போது **இந்தியாவில்** சம்பவித்துக்கொண்டிருக்கிறது. ஆஸ்பத்திரி அனைத்திலும் கொரோனா நோயாளிகளால் நிறம்பி வழிகிறது. ஆஸ்பத்திரிகளில் **படுக்க இடம்** இல்லாததால் **ஆம்புலன்ஸில்** அழைத்து வந்த **கொரோனா வியாதியஸ்தர் மரத்தடியிலு**ம் ரோடு ஓரங்களிலும் **படுக்கவைக்கப்பட்டு** மரணத்தை எதிர்நோக்கிய வண்ணம் இருக்கிறார்கள். **ஆக்சிஜன்** (பிராண வாயு) கிடைக்காமல் மூச்சு வாங்க முடியாமல் துடிதுடித்து மரிப்பதை தங்கள் கண் முன்னே கண்டதால் **டாக்டர்களும் – செவிலியர்களும்** கண்ணீர்விட்டு அழுவதை உலகமே TV வழியாக பார்த்து கலங்கிப்போய்விட்டது. டிவிட்டர்களிலும் பத்திரிகைகளிலும் மக்களை பாதுகாக்க வேண்டிய இந்த மத்திய அரசு என்ன செய்துகொண்டிருக்கிறது ? என்று எழுதி கேட்கிறார்கள்.

**ஒரு வாரத்துக்குன் அக்சிஜன்கள்** அனைத்து மாநில ஆஸ்பத்திரிக்கும் கிடைக்க ஏற்பாடு செய்தாக வேண்டும் என்று **சுப்ரீம் கோர்ட்** மத்திய அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும் அரசாங்கம் **பிச்சை எடுத்தாவது மக்களுக்கு அக்ஜிஜன்** கிடைக்க வழி செய்யுங்கள். அப்படி செய்யாவிட்டால் **நீதிமன்ற அவமதிப்பு வழக்கு மத்திய அரசுக்கு எதிராக** தொடுக்கப்படும் என்று எச்சரித்துள்ளார்கள். இப்படி எச்சரித்தது இந்தியாவை ஆளும் **காவி கட்சி** அரசுக்கு கோபம் உண்டாகி, நீதிமன்றம் இந்த கொடிய **கொரோனா பிரச்சனையில் தலையிடக்கூடாது** என்று **பிரமான பத்திரம்** எழுதி **உச்ச நீதிமன்றத்துக்கு** எதிராக தாக்கல் செய்துள்ளது.

இது ஒருவித **பணிப்போர் போலவும், பலப்பரீட்சை** போலவும் காணப்படுகிறது. இந்தியாவை ஆளும் **மத்திய அரசு பெரியதா? நீதிமன்றம் பெரியதா?** என்று **சவால்விடும்** நிலைக்கு மத்திய அரசு பணிப்போர் தொடங்கிவிட்டது. இது நம் தேசத்துக்கு நல்லதல்ல.

☐ **சுப்ரீம் கோர்ட்** மத்திய அரசை இப்படி கண்டித்து கட்டளையிட காரணம் என்ன ?

இந்திய பிரதமர் திரு. **மோடி** அவர்களும் – ஹோம் மினிஸ்டர் திரு. அமித்ஷா அவர்களும் 3 காரியங்கள் தங்கள் **ஆட்சி காலத்திலேயே** நடத்தி முடிக்க வேண்டும் என்று வெறித்தானமாக இருக்கிறார்கள்.

1) **பிரதமர் இல்லம்** – அரண்மனை தோற்றத்தில் கட்ட ஆகும் செலவு 20,000 கோடி

2) **பார்லிமென்ட் கட்டிடம்** – கட்ட ஆகும் செலவு சுமார் 40,000 ஆயிரம் கோடி

3) **ராமர் கோவில்** – கட்ட ஆகும் செலவு பல ஆயுரம் கோடி மற்ற இரண்டை காட்டிலும் அதிகம் என்கிறார்கள்.

1) **பிரதமர் இல்லத்தை** கட்ட **மத்திய விஸ்டா திட்டம்** என்ற பெயரில் பெரும் தொகை நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த பிரதமர் இல்லத்தை கட்ட ஆகும் செலவு 20,000 கோடியில் 62 கோடி **கொரோனா தடுப்பூசிகளை** வாங்கலாம். 22 கோடி **ரெம்டெசிவர் மருந்து குப்பிகள் வாங்கலாம்.**

மேலும் பிரதமர் வீட்டுக்கு செலவு செய்யப்படும் நிதியில் **3 கோடியை** 10 லிட்டர் ஆக்சிஜன் சிலிண்டர்களை வாங்கலாம். மீதியுள்ள பணத்துக்கு 12,000 **படுக்கை வசதியுடன்** கூடிய 13 **எய்ம்ஸ் ஆஸ்பத்திரிகளையே** பல்வேறு இடங்களில் கட்டலாம். இதுபோக பிரதமர் நிதியில் இன்னும் மீதியுள்ள கோடி ருபாய்களை இப்போதுள்ள அவசரகால தேவைகளை பூர்த்தி செய்யலாம் என்று கணக்கிட்டுள்ளார்கள்.

2) **பிரதமர் இல்லத்துக்கு** செலவாகும் பணத்தைபோல சுமார் 6 மடங்கு கேடிகளை பார்லிமெண்ட் கட்டிடத்துக்கு செலவழித்துக்கொண்டிருக்கிறார்கள். கட்டிட வேலை ஆரம்பித்து விட்டது.

3) **பிரதமர் இல்லத்துக்கு** செலவாகும் பணத்தை போல் 10 மடங்கு பணம் **அயோத்தியில் தங்க தகடுகளால்** ராமர் கோவில் கட்டுமான பணிக்கு செலவிடப்பட்டு கட்டிட வேலை தொடங்கிவிட்டது.

**இப்போது கேள்வி என்னவென்றால்...**

1) இந்திய நாடே கொரோனா தொற்றால் **வாழ்வா – சாவா** என்ற **மரண போராட்டம்** நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது பிரதமர் **தன் வீடு கட்டும் பணியை** சில காலம் நிறுத்தி அந்த பணத்தை இந்தயாவில் அனைத்து மாநிலங்களிலும் உள்ள மக்களின் உயிர்களை **காப்பாற்றலாமே !**

2) ஏற்கனவே மிக அழகான (வெளிநாட்டினர் வியக்கும் வகையில்) எந்த **நில அதிர்ச்சியையும்** தாங்கும்வகையில் ஏற்கனவே கட்டப்பட்ட பிரம்மாண்டமான **பார்லிமென்ட்** கட்டிடம் எந்த பழுதும் இல்லாமல் மிகக் அழகாக கம்பீரமாக இருக்க புதிய பார்லிமெண்டுக்கு அதுவும் புதிய பிரம்மாண்டமான சுமார் 40,000 கோடி செலவில் பார்லிமெண்டுக்கு **புதிய கட்டிடம் எதற்கு?** தேவைதானா? இப்போதுள்ள கொடூரமான சூழ்நிலையில் மூன்று பிரம்மான்டமான கட்டிட வேலையை நிறுத்தி இந்த லாக்டவுன் சமயத்தில் வேலையிழந்த **பல கோடி மக்களுக்கு** ஒரு நாளைக்கு **ஒரு வேளை சாப்பாடாவது** போட ஏற்பாடு செய்யலாமே !

2) **ராமர் கோவிலுக்கு தங்க தகடுகள்** வேயும் கோவில் பணியை நிறுத்தி கொரேனாவில் **அனாதைகளாக** ஆக்கப்பட்ட **பிள்ளைகளை** காப்பாற்ற அவர்களை **படிக்க வைக்க** கோடிகளில் ஒரு பகுதியை செலவிடலாமே !

தின கூலி சம்பாதித்த கணவனின் மரணத்தால் விதகைளாகிபோன லட்சக்கணக்கான குடும்பங்களை வாழ வைக்கலாமே. **பெற்றோரை** இழந்த வாலிப பிள்ளைகளில் **படிப்பு தொடர பண உதவி செய்யலாமே!**

இந்த கேள்விகளுக்கெல்லாம் இவர்கள் யாரும் பதில் அளிக்கமாட்டார்கள்.

இவர்களுடைய வெறி என்னவென்றால் காவி கட்சியின் ஆட்சிகாலத்திலேயே இவைகளை கட்டி முடித்து தங்கள் பெயர் **கல்வெட்டுகளில்** வரவேண்டும். பிரதமர் தனி மனிதர், **மனைவி, தாய்கூட உடன் இல்லை.** இப்படிப்பட்ட தனி மதனிதரான பிரதமருக்கு **அரண்மனை போன்ற** வீடு அவசியமா ? அந்த புது வீட்டில் நூற்றுக்கணக்கான அறைகள் உண்டாம் . ஒரு நாளை ஒரு அறையில் படுத்து எழுந்து சுகம் அனுபவித்தாலும் எத்தனை அறையில் படுக்க இவர் அந்த அறைகளை உபயோகிப்பார். இவர் **உறவினர்களைக்கூட** அண்ட விடுவதில்லை, **மனைவியை** தன்னோடு வாழ **அனுமதிப்பதில்லை**. பிறகு யாருக்காக இத்தனை பிரமாண்ட கட்டிடம் ?

இந்த மக்கள் கொரோனாவில் பிடிபட்டு **கொத்து கொத்தமாக** செத்துக்கொண்டிருக்கும் இந்த வேலையில் மேலே கூறிய 3 பிரம்மாண்ட கட்டடங்களை கட்டுவதை தற்காலிகமாக நிறுத்தாவிட்டால் இவர்கள் இந்திய மக்களின் கோபத்துகுள்ளாவார்கள், கோபம் வெறுப்பும் கலந்து மக்கள் **கொதிக்தெழுந்தால்** உள்நாட்டு கலகமும் உள்நாட்டு போரும் உண்டாவதை இவர்கள் தடுக்க முடியாது என்று சில அரசியல் வல்லுனர்கள் கூறியதால் அறிந்தேன். இப்போதே **சட்டம் ஒழுங்கு கெட்டு** எங்கு பார்த்தாலும் **கொலையும்** கொள்ளையும் நடந்துகொண்டருக்கிறது, மேலும் சில குடும்பத்தில் சொந்த **மகளை கெடுத்து** சீர்குழைந்த **தகப்பன்**, பணத்துக்காக சொந்த **அக்காவை** கற்பழித்த **தம்பி**, இப்படி பல சம்பவங்கள் **இந்தியா அனைத்தும்** அரங்கேறி கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் யார் ? என்று தெரிந்தால் ! அவர்கள் மககள் கையில் கிடைத்தால் மக்கள் கடித்து துப்பிவிடுவார்கள் போலிருக்கிறது. அவ்வாறு சோகத்திலும் வெருப்பிலும் மக்கள் இருக்கிறார்கள்.

## வெளி நாடுகள் இந்தியாவுக்கு எச்சரிப்பு கொடுத்துவிட்டது

நீதிமன்றமும் எச்சரிப்பு கொடுத்துவிட்டது. ஆளுகிறவர்கள் **மனித நேயத்தோடு** இந்திய நாட்டை ஆளாவிட்டால் விரைவில் **இந்தியாவில் ஆட்சி மாற்றம்** உண்டாகும். இப்போதைய பிரதமர் தூக்கி எறியப்படுவார். பெரும்பாலான **மாநிலங்களில் குறிப்பாக காவி கட்சி** ஆளாத மாநிலங்களில் உள்ள பல்வேறு **அரசியல் தலைவர்கள்** மேற்கு வங்க **முதல்வர் மம்தா** அவர்களை **பிரதமர்** ஆக்க நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். என்று கேள்விப்படுகிறேன்.

ஏற்கனவே காவி கட்சிகள் **தேர்தல் அதிகாரிகளை தன் கைப்பிடியில்** வைத்து ஆட்டுவிக்கிறார்கள். நீதிபதிகள் பலரை பெரும் **தொகையையும் பதவியையும்** காட்டி தங்களுக்கு **சாதகமாக தீர்ப்புகள்** வெளிவரவேண்டும் என்று நிதிபதிகளை பயமுறுத்தி வைத்துள்ளதாக பேசப்படுகிறது.

ஏற்கனவே இந்தியாவில் **ஒடிசா மாநிலத்தில் மிஷனரி, இரண்டு பிள்ளைகளை** தீயிட்டு கொன்றவனை **தூக்கு தண்டனையிலிருந்து** காப்பாற்றி – இப்போது அவன் வெளியில் **சுதந்திரமாக திரியும்** வகையில் **தீர்ப்பு கூறிய உயர்நிதிமன்ற ஜட்ஜ்** அவர்களுக்கு **கேரள மாநிலத்தின் கவர்னர் பதவியை** தாமதமில்லாமல் பரிசாக கொடுக்கப்பட்டது என்று கூறப்படுகிறது. மேலும் தாங்கள் கூறிபடி தீர்பளித்த **சுப்ரீம் கோர்ட் நீதிபதி** அவர்களுக்கு அவர் ஓய்வுபெற்ற மறுவாரமே **MP பதவி பரிசாக** அளிக்கப்பட்டது கண்கூடாக காண்கிறோமே!

பணத்துக்கும் பதவிக்கும் மசியாத **நீதிபதிகளை கொலை மிரட்டலோடு** குடும்பத்தில் உள்ள அனைவரும் கொல்லப்படுவார்கள் என்று பயமுறுத்தி வைத்துள்ளதாக அறிகிறோம். இதற்கு பயந்து ஒரு நீதிபதி தான் ஓய்வு பெரும் காலத்துக்கு முன்பே தன் நீதிபதி பதவியை ராஜினாமா செய்ததாக ஒரு செய்தி கூறுகிறது.

## பிரதமரின் கொரோனா எச்சரிப்பு செய்தி

பிரதமர் **வானொலி** மூலமாகவும், TV **மூலமாகவும்.** முக கவசம், இடைவெளி விடுதல், கூட்டம் கூடுதல் ஆகியவைகளை குறித்து தினசரி எச்சரிப்பு கொடுத்து வருகிறார்.

கிறிஸ்தவர்கள் **குருத்தோலை ஞாயிறு** ஊர்வலம் நிறுத்தப்பட்டது. **ஞாயிறு ஆராதனையில்** 50 அல்லது 100 நபர்களுக்குமேல் கூடக்கூடாது என்ற கட்டுப்பாட்டால் **ஞாயிறு ஆராதனை** நடத்தியவர்கள் **சனி** கீழமைகளில் ஆராதனை நடத்தி **ஏழாம் நாள் சபையினரைப்போல்** மாறிப்போனார்கள்.

**இஸ்லாமியர்களுக்கும்** அதே கட்டுப்பாடு **ரம்ஜான் பண்டிகையை** அவர்கள் வீடுகளில் தொழுகை நடத்தினார்கள். மதுரை **கல்லழகர் வைகை நதியில் இறங்க** லட்சக்கணக்கில் கூடுவார்கள். இரண்டு வருடமாக கூடவில்லை. ராமேஸ்வரம் போன்ற இந்து கோவில் **திருவிழாக்கள் நிறுதப்பட்டது.**

ஆனால்...

**வட இந்தியாவில்** மட்டும் **ரிஷிகேஷ், ஹரித்துவார்** போன்ற இடங்களில் நடந்த **கும்பமேளாவில்** நிர்வாண **சாமியார்கள். சன்யாசிகளுக்கு** கீழ்படிந்து ஒரு நாளுக்கு **ஒரே இடத்தில் 38 லட்சம் ஆட்கள் கூடி** கங்கை நதியை நாற்றமெடுக்க செய்துவிட்டார்கள். இதில் கலந்துகொள்ள இந்தியாவில் **நாலுபக்கம் உள்ள மாநிலங்களிலிருந்து** மக்களை அழைத்து வர சுமார் 300 ரயில்கள் **இலவசமாக விடப்பட்டது.** இடைவெளி **முகக்கவசம் இல்லாமல்** வண்டிக்குள்ளும் **ரயில் பெட்டிகள் மேலும்** அயிரமாயிரம் **மக்கள் பிரயாணம்** செய்து கும்பமேளாவில் முகக்கவசம் இல்லாமல் **இடைவெளியின்றி கொரோனாவை பரப்பினார்கள்.** அவர்கள் திரும்பி சென்ற **ஊர்களிலும்** கொரோனாவை **பறவவிட்டார்கள்.** தென் இந்தியாவில் மட்டும் **கிறிஸ்தவர்கள்,** முகமதியர் பண்டிகையில்கூட கூடாது. 50 நபர்களுக்குமேல் எந்த இடத்திலும் கூடி நிற்கக்கூடாது என்று தினசரி கண்டிப்புடன் கூறிய பிரதமர் **கும்பமேளாவை ஒரு வருடம் தள்ளிவைத்தால் என்ன ?**

**எதிர்கட்சிகளும்** வெளிநாட்டினரும் **கும்பமேளா கூடுகையை** காட்டமாக விமர்சித்தார்கள். **பிரதமரையும் கடிந்துகொண்டார்கள்.** மக்கள் **எதிர்ப்புகள்** வலுக்க ஆரம்பித்தவுடன் சாமியார்களையும் சன்னியாசிகளையும் அழைத்து **ஒரு மாதத்துக்குள் கும்ப மேளா பண்டிகையை** நிறுத்தி உதவுங்கள். **3 மாத கும்பமேளா பண்டிகை** வேண்டாம் என்று கெஞ்சி கேட்க ஒரு மாத கூடுகையுடன் நிறுத்திகொண்டார்கள.

கம்ப மேளாவுக்கு ஒரு நாளைக்கு **38 லட்சம்** மக்கள் வந்து போனார்கள். அப்படியானால் **30 நாட்களுக்கு** எத்தனை **கோடி மக்கள்** கும்ப மேளாவில் கூட கொரோனா கிருமியை கொடுத்தும் எடுத்தும் போயிருப்பார்கள்.

இந்தியாவில் **கெரோனா மிக அதிகம் கூடி** மக்கள் லட்சக்கணக்கில் செத்துபபோக **திரு. மோடியின் மோசமான ஆட்சி** மிகமுக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

நான் எழுதிய அத்தனை தகவல்களும் டெல்லி, கொல்கத்தா ஆந்திரா, மஹாராஷ்டிரா, தமிழ்நாடு கேரளா ஆகிய மாநிலங்களன் **தினசரி செய்தித்தாள்களில்** 11-05-2021 அன்று வெளிவந்ததாக எனக்கு செய்தி கிடைத்தது. **தொலை பேசியில்** எனக்கு இவைகளை அறிவித்தவர் யார்? **செய்திதாள் கட்டிங்ஸ்** அனுப்பிய நபர் யார் என்று எனக்கு தெரியாது.

நம் பாரத தேசத்தை ஆள்பவருக்காக ஜெபிப்போம்.

**கர்த்தர் தேசத்துக்காகச் செய்யப்பட்ட வேண்டுதலைக் கேட்டருளினார்.** 2 சாமு. 24:25

# ஆறுதல்

இந்தியாவில் **தமிழ்நாட்டில்** நடந்து முடிந்த **சட்ட சபை தேர்தலில்** புதிய அரசாங்கம் **ஆட்சி கட்டிலில்** அமர்ந்துள்ளது.

**எப்போது பொழுது விடியும்** என்று காத்திருந்தவர்கள் அடையும சந்தோஷம் **புதிய அரசாங்கம்** ஆட்சியில் அமர்ந்தவுடன் தமிழ்நாட்டு மக்களுக்கு அந்த சந்தோஷம் உண்டானது. **ஆட்சியில் அமர்ந்திருக்கும் கட்சியும்- தோற்றுப்போன கட்சியும்** ஒரு காலத்தில் ஒன்றாக இருந்தது. கட்சி இரண்டாக உடைந்ததும் இரு பெரும் கட்சிகளாக அது உருவெடுத்தது அதன்பின் இவர்கள் இருவருமே மாறி மாறி ஆட்சி செய்தார்கள்.

இந்த இரண்டு கட்சிகளும் ஒன்றுபோல் **ஊழல் செய்தவர்கள் தான்.** அதனால்தான் **பெருந்தலைவர் காமராஜர்** அவர்கள் இந்த இரண்டு கட்சிகளும் **ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள்** என்று வர்னித்தார்.

ஆனால் இந்த முறை **முதல்வர்** பொறுப்போற்றிருப்பவரின் **சில வார செயல்பாடுகள் குறித்து** அனைத்து கட்சியினரும் புகழும் வண்ணம் அமைந்தது. அந்த கட்சியினரே **மரித்த முதல்வரை**விட அவர் **மகனின் அனுகுமுறை** மிக சிறந்ததாக காணப்படுகிறது என்கிறார்கள். தமிழ்நாட்டின் **தலைமை செயலரை** தேர்ந்தெடுத்த வித்திலிருந்து கடந்த ஆட்சிகளோடு ஒப்பிட்டால் இந்தமுறை ஆட்சி பெருமளவு வித்தியாசப்படுகிறது. கட்சியின் **முதிர்ந்த தலைவர்களுக்**கு சிறிய பதவி கொடுத்து அவர்களை **ஓரம் கட்டியது** இவரின் துணிச்சலை காட்டுகிறது. ஆனால் ஊழலில் இரண்டு MLA க்களை சேர்த்தது நெருடலை உண்டாக்குகிறது. இது முதல்வர் மிக நன்றாக அறிந்தே அவர்களை மந்திரிகளாக ஆக்கியிருப்பது ஒரு கருப்பு புள்ளியாக தென்படுகிறது.

**புதிய முதல்வர் அவர்களுக்கு நமது வாழ்த்துக்கள்**

**மிக அற்புதம்:** எந்த மந்திரியும் யாருக்காக வேண்டியும் **போலீஸ் அதிகாரிகள்** முன்னிலையில் **கட்டப்பஞ்சாயத்து** செய்வதை நான் பொறுத்துக்கொள்ளமாட்டேன் என்ற முதல்வரின் வெளிப்படையான கண்டிப்பு தமிழ்நாடுக்கு மிக தேவையான ஒன்றாகும்.

புதிய மந்திரி சபை கூட்டத்தில் **மந்திரிகளுக்கு முதல்வர் கொடுத்த எச்சரிக்கை.** புதிய ஆட்சியில் **மந்திரிகளான நம்மை பணம் சம்பாதிக்க** புதிய முதல்வர், குறித்து மற்ற மந்திரிகள் முனுமுனுத்தது **தடையாக** இருப்பாரோ! **தேர்தலில் நாம் செலவழித்த பணத்தை திரும்ப எடுப்பது எப்படி?** என்ற எண்ணங்கள் மந்திரிகள் உள்ளத்தில நிச்சயம் எழுந்திருக்கும்.

வழித்து கொட்டிய வெரும் பானையாக (காலியான கஜானா ) விட்டுவிட்டுப்போன **பழைய பெருச்சாளிகள்** எள்ளி நகையாடி அரசாங்க கஜானாவில் பணம் இல்லாமல் இவர் எப்படி ஆட்சியை நடத்த போகிறார் பார்ப்போம் என்று எதரிபார்த்தவர்கள் ஆச்சர்யப்படும் அளவிக்கு பல நற்காரியங்களுக்கு பணம் அள்ளி கொடுக்கும் அவர் நிர்வாகத்தை எல்லாரும் அதியசத்தோடு பார்க்கிறார்கள்.

பாலுக்கு **3 ரூபாயை குறைத்து**, குடும்பத்தக்கு **நான்கு ஆயிரம் ரூபாய் ,** சமையலுக்கு தேவையான **பலவகை சமையல் பொருள்கள் நிறந்த பை.** ஆகிய உதவிகள் லாக்டவுன் சமயத்தில் வேலையே இல்லாமல் போனாலும் வாழலாம் என்ற நம்பிக்கை மக்களுக்கு உண்டானது. **பெண்கள்** எங்கு பயனம் செய்தாலும் **அரசாங்க பஸ்களில்** பாஸ் இல்லாமல் **பணம் கொடுக்காமல் எங்கும் ஏறலாம். எங்கும் இறங்கலாம்.**

இந்த ஏற்பாடுகள் **தமிழ்நாட்டு பெண்களை** குறிப்பாக **எதிர்கட்சி** பெண்களையும் வாயார புகழும்படி வைத்தது. அண்டை மாநிலத்தினரும் இது எப்படி சாத்தியமாகும் என்று ஆச்சரியப்படுகிறார்கள்.

**கொரோனா வார்டில்** வேலைசெய்யும் **டாக்டர்,** செவிலியர், **கடை நிலை ஊழியர்** வரை சம்பளத்துக்குமேல் **30 ஆயிரம், 15 ஆயிரம், 10 ஆயிரம்,** என்று மாத ஊழியத்தோடு சேர்த்து வாங்க முதல்வர் ஏற்பாடு செய்துள்ளது பெருமையடைய செய்கிறது.

இது அனைத்து அரசாங்க ஆஸ்பத்திரியிலும் இரவு-பகல் என்று பாராமல் **தன் உயிருக்கு உத்திரவாதம்** இல்லாத நிலையில் **கொரோனா சகிச்சை** செய்யும் அரசாங்க ஆஸ்பத்திரியில் வேலை செய்பவர்களை **மிகவும் உற்சாகமடைய செய்தது.** கடந்த ஆட்சியில் **தற்காலிக செவிலியர்களாக** ஆஸ்பத்திரியில் வேலை செய்தவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். **புதிய முதல்வர்** ஆட்சியில் வந்த உடன் ஆயரக்கணகான அத்தனை செவிலியர்களுக்கும் **நிரந்தர பணியளித்து** 15 அயிரம் சம்பளத்தை இந்த ஆட்சியில் **40 ஆயிரமாக** உயர்த்தி கட்டளையிட்டார். அத்தனை பேரும் நன்றி பெருக்கத்தோடு கண்ணீர்மல்க **கைகூப்பி** புதிய முதல்வருக்கு நன்றி கூறிய காட்சி TVயில் கண்டபோது தமிழ்நாட்டில் வாழும் நம் யாவருக்கும் பெருத்த ஆறுதல் உண்டானது அந்த செயல் முதல்வரை மிகவும் பெருமைபடுத்துகிறது.

**ஜாமக்காரன்** வாசகர்களுக்கு நாம் கொடுத்த ஆலோசனையின்படி தேர்தலில் **குறிப்பிட்ட கட்சிதான்** ஜெயிக்கவேண்டும் என்று **ஜெபிக்காமல்** கர்த்தாவே உமக்கு தெரியாமல் அதிகாரமும் இல்லை – ஒரு ராஜாவை தள்ளி – மற்றொரு ராஜாவை உயர்த்துபவர் நீர் ஆகவே **எங்கள் தமிழ்நாட்டுக்கு** ஒரு **நல்ல ஆட்சியை தாரும்**, நல்ல **நிர்வாகிகளை தாரும்** என்றுதான் ஜெபிக்க வேண்டும் என்று எழுதி கேட்டுக்கொண்டேன்.

மற்றபடி **சத்தியம் TV ஏஞ்ஜல் TV** ஆகிய சில TVகளில் ஜெபிப்பவர்களைப்போல் கர்த்தாவே – BJP கட்சி ஒழுந்து போகட்டும் DMK கட்சி வரக்கூடாது AIADMK கட்சி வரக்கூடாது காங்கிரஸ் வரக்கூடாது என்ற வார்த்தைகள் உண்மையான **ஊழியர்கள், விசுவாசிகள்** வாயிலிருந்து வரக்கூடாது.

ரோம, 13:1-5 பவுல் குறிப்பிட்டதுபோல **சகல அதிகாரங்களுக்கும் நாம் கீழ்படிந்திருக்க வேண்டும்.** நம் தெய்வத்துக்கு தெரியாமல் எந்த அரசாங்கமும் வராது.

மேலே குறிப்பிட்ட கட்சியின் ஆட்சி ஆரம்பத்தில்பெற்ற **நல்ல பெயர். நல்ல ஆட்சி** கடைசி வரை தொடரவேண்டும். மேலும் **இப்போதுள்ள ஆட்சியில்** உள்ளவர்கள்

அனைவரும் **யோக்கியர்கள் அல்ல, ஊழல் பணத்தை ருசிப்பதில் கைதேர்ந்தவர்கள். 10 வருட வனவாசத்துக்கு** பிறகு நல்ல பாடம் படித்திருப்பார்கள். கடந்த ஆட்சியில் நடந்த சொல்ல முடியாத **அராஜகம்,** அதன் **விளைவு, மக்கள் வெறுப்பு,** நாட்டின் பாதிப்பு அனைத்தையும் புதிய முதல்வர் நன்றாக அறிவார். TVமூலமாக மக்கள், அரசியல் தலைவர்களால் பேசப்பட்டதும். பத்திரிகை மூலமாக எழுதப்பட்டதுமான முந்தைய ஆட்சியின் **அலங்கோலம்** – மக்கள் இப்போதுள்ள **புதிய ஆட்சியில்** எதை எதிர்பார்க்கிறார்கள் என்பதை நாமும் அறிவோமே. அதற்காக நம் **தினசரி ஜெபத்தில் ஆள்பவர்களுக்காக அதிகாரிகளுக்காக, காவலர்களுக்காக மத்திய அரசாங்கத்துக்காக** நம் தனி **ஜெபத்தில்** தொடர்ந்து ஜெபிப்போம்.

கர்த்தாவே அவர்கள் **ஒழிந்து போகட்டும்,** எழுப்புதல் எழுப்புதல் என்றும் **கொரோனாவே ஒழிந்துபோ** என்று உனக்கு **கட்டளை இடுகிறேன்** என்று தொண்டை **கிழிய சப்தம் போடுவதால்** ஒன்றும் **நிகழப்போவதில்லை. எழுப்புதல்** என்று சப்தம் போட்டு **அழுவதால்** ஒருபோதும் எழுப்புதல் வராது.

குறிப்பாக **விக்கிரக பிசாசை** எங்கள் தேசத்தை விட்டு நீங்கிபோகும்படி **இயேசுவே கட்டளையிடுகிறேன்.** இப்படி புத்தியில்லாமல் ஜெபிக்க யார் இவர்ளுக்கு ஜெபிக்க கற்றுக்கொடுத்தார்களோ தெரியவில்லை!

கண்டிப்பாக சுகமாக்கும் ஆண்டவரே! என்று **இயேசுவுக்கு கட்டளையிட இவர்கள் யார்?** கர்த்தருக்கு **ஆலோசனை** கூற இவர்களுக்கு அதிகாரம் கொடுத்தது யார் ?

இப்படிப்பட்ட ஜெபத்துக்கு **ஆமென்** கூறும் **மந்த புத்தியுள்ள** கிறிஸ்தவர்கள் TV முன்பாக **அமர்ந்து** ஜெபத்தில் கலந்துகொள்கிறார்கள். ஜெபத்தை நடத்துபவர்கள் **மாயமாலமான அழுகையை** பார்பவர்கள் அவர்களோடு சேர்ந்து அழுகிறார்கள்.

**விக்கிரக பிசாசு** என்று இவர்கள் வர்ணிக்கும் **விக்கிரகம்** இந்தியாவில் இருப்பதைவிட உலக முழுவதும் பெரும்பான்மையாக உள்ள **கத்தோலிக்க சபை கிறிஸ்தவர்களிடம்** உண்டு.

**பாபிலோனிய** பெண் விக்கிரக தெய்வங்கள் பற்றி வேதத்தில் பார்க்கலாம். அப்படிப்பட்ட **விக்கிரக பெண்** தெய்வங்களில் ஒன்றுதான் **மரியாள்** வணக்கக்காரர்கள். **மாதா** என்ற பெண் **விக்கிரக தெய்வத்தை** இவர்கள் வணங்குகிறவர்களைத்தான் **மாதா தொலைகாட்சியில்** காலை முதல் இரவு வரை காணமுடிகிது. அந்த TV பார்பவர்களுக்கு

அவர்கள் தவறான ஆலோசனை கொடுக்கிறார்கள். அதே மாதா TV சேனலில் காலை முதல் இரவு வரை **மாதாவோடு** ஜெபிப்பதுதான் அதிகம். ஊர்காவாக தொட்டு கொள்வதைபோல அவ்வப்போது **இயேசுவோடு** ஜெபிப்பதையும் காணலாம்.

இப்படிப்பட்ட **பெண் தெய்வ** விக்கிரக ஆராதனைக்காரர்களுக்காக **சத்தியம் TV**யில் மோகன் C லாசரஸ்ஸோ **ஏஞ்ஜல்** TV காரர்களோ **இயேசு அழைக்கிறார்** என்ற பணக்கார **ஸ்டார் ஊழியர்களோ** விமர்சிப்பதில்லை **மரியாள் என்ற பெண் தெய்வத்தை** வணங்குகிறவர்களை குறிப்பிட்டு **விக்கிரக பிசாசை ஆராதிப்பவர்களை** எங்கள் **தேசத்தைவிட்டு நீக்கும்** என்று ஒருநாளாவது இவர்களில் யாராவது ஜெபித்தது உண்டோ !

இந்த ஜெபத்தை ஏறெடுக்காதவர்கள் **இந்து மத விக்கிரக** தெய்வங்கள் இந்தியாவை விட்டு **ஒழிந்து போகட்டும்** என்று ஜெபிக்க தகுதியற்றவர் ஆவர்.

கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கிறார். இந்தியாவில் மட்டுமல்ல அனைத்து நாடுகளிலும் **பெண் தெய்வ** விக்கிரக ஆராதனைகள் பெருகிகொண்டே போகிறது. மாதா TVமுன் இருந்ததை விட இப்போது மாதா TV பார்ப்பவர்கள் பெருகிபோனதால்தான். **ஜெபமாலை** ( ரோசோரியர்) மாதா ஜெபமாலை பலருடைய **கார்களில்** வாகனங்களில் **கழுத்தில்** மாலையாக அணிந்திருப்பதை வெளிப்படையாகவே பார்க்கலாம்.

கர்த்தரின் **கோபம் கொரோனாவாக மாறி** பற்றி எறியாமல் எப்படி இருக்கும்? முதலில் கிறிஸ்தவர்கள் **கிறிஸ்துவை தங்கள் உள்ளத்தில் வரவழைத்தால்** அவர்கள் வசனத்தின் படியுள்ள உண்மையான கிறிஸ்தவர்களாக காட்சி அளிப்பார்கள். அப்போதுதான் கர்த்தரின் **கோபம் தனியும். கொரோனா மாறும்.** இயேசு **என் உள்ளத்தில்** உண்டு, வாசிக்கிற **உங்கள் உள்ளத்தில் உண்டா?**

- ☐ நீங்கள் அனுப்பிய **சாட்சி கடிதங்கள்** கிடைத்தது. **தொலைபேசி** வழியாக ஜெபித்த ஜெபத்துக்கு கர்த்தர் கிருபை அளித்து **அற்புதம்** செய்திருக்கிறார். காரணம் ஜெபிக்க கேட்டுக்கொண்டவர்களுக்கு **ஆலோசனை கொடுத்து** அதன்பின் **ஜெபித்ததால் தான்** இத்தனை அற்புதங்கள் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நடந்தது. கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.
- ☐ நீங்கள் அனுப்பிய காணிக்கைகள் யாவும் கிடைத்தது. நன்றி. தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

**டாக்டர் புஷ்பராஜ்**

# திருமதி பேதுரு

நன்றி EZS **Raja Nayagam**

திருவாளர் **பேதுரு** புதிய ஏற்பாட்டிலுள்ள மிக முக்கியமான பாத்திரங்களில் ஒருவன். நற்செய்தி நூல்களில் இவன் பற்றிய காரியங்களைப் பரவலாகவும், **அப்போஸ்தலர் நடபடிகள்** நூலின் **முற்பகுதியை ஆக்கிரமிப்பவனாகவும்** காணமுடியும். இது தவிர, **கொரிந்தியர், கலாத்தியர்** நூல்களில் இவனை பற்றி சில குறிப்புகள் உண்டு. இன்னும் **இரண்டு நிரூபங்களை** இவரைக்கொண்டு எழுத தேவன் இவனை அனுமதித்ததும் நமக்குத் தெரியும். இப்படிப்பட்ட இந்த பேதுரு பற்றி நாம் பேசுவதற்கும், சிந்திப்பதற்கும் எழுதுவதற்கும் ஏராளம் உண்டு. ஆம், இயேசு கிறிஸ்து பேதுருவை ஆண்டவரால் தன்னுடைய **சீடர்களில்** ஒருவனாக இருக்கும்படி கலிலேயாக் கடற்கரையிலிருந்து இவரை அழைக்கப்பட்ட (மாற்கு 1:11) அந்த நாள் தொடங்கி, பேதுருவாகிய **நான் என் கூடாரத்தை** (சரீரத்தை) **விட்டுப்போவது சீக்கிரம் நேரிடும்** (II பேதுரு 1:13) என்று அறிவிக்கும் காலம் வரையிலான பேதுருவின் **ஏற்ற, இறக்கங்கள்** கொண்ட வாழ்வுபற்றி நாம் விதவிதமான கோணங்களில் பார்த்துப் பேசவும், எழுதவும் முடியும். ஆனால் **திருமதி பேதுரு** பற்றி நேரிடையாக எந்த தடயமும் வேதத்தில் இல்லையே என்று நீங்கள் எண்ணுவது எனக்குப் புரிகிறது. எதற்கும் முயற்சித்துப் பார்க்கலாம் வாருங்கள்.

**திருமதி பேதுரு,** அப்போஸ்தலன் பேதுருவுக்கு **வெகுமதியாக** கர்த்தரால் கொடுக்கபட்டவள். எப்படியெனில், ... புத்தியுள்ள **மனைவி கர்த்தர் அருளும் ஈவு** என்று (நீதி19:14). **ஞானி சாலமோன்** மூலம் நாம் அறிய முடியும். **ஈவு** என்பதும் **வெகுமதி** என்பதும் ஒன்றுதான். நம் தாய்மொழித் தமிழில் **திருமதி** என்பது ஓர் அழகு சொல். **திரு, திருமதி** போன்றவைகள் மரியாதைக்கான சிறப்பு வார்த்தைகள். எப்படியெனில், இளம் பிள்ளைகளாக இருக்கும்போது **செல்வன், செல்வி** என்று சொல்லப்படுவார்கள், வாலிபத்தை அடையும் போது **குமரன், குமரி** என்று அழைக்கப்படுவார்கள். அவர்கள் வாழ்வின் அடுத்த நிலையாகிய **திருமண பந்தத்தில்** இணையும் போது, **திரு மற்றும் திருமதி** ஆக மாறிவிடுகிறார்கள்.

திரு என்னும் தமிழ்ச் சொல்லுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட பொருள்கள் உண்டு. அவைகளுள் **சிறந்த, தேர்ந்த** என்பவைகளும் அடக்கம். அதாவது, அன்பில், ஆற்றலில்,

பண்பில், பக்குவத்தில் **திரு** ஆக இருக்கும் ஒருவன் தேர்ந்தவனாக, சிறந்தவனாக இருப்பான் என்பதே அதற்கான விளக்கப் பொருள். நடைமுறையில் **திரு** என்பவர் இப்படியா இருக்கிறார் என்ற கேள்வி எல்லாம் வேண்டாம். இப்படி இருக்கவேண்டுமென்பது காலங்காலமான தமிழ்ச் சமுதாய கலாச்சார எதிர்பார்ப்பு. சரியா?

சரி, எப்படியோ இது ஓரளவு புரிகிறது. ஆனால் பெண்களை **திருமதி** என்று அழைப்பது எப்படி என்று கேட்கிறீர்கள். அப்படிதானே. **திருமதி** என்பது ஒரு கூட்டு வார்த்தை **திரு + மதி= திருமதி** ஆண்களுக்குரிய **திரு**வுடன் **மதி** பெண்களோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. **மதி** என்றால் **அறிவு, புத்தி** என்று பொருள்படும். இங்கே ஆண்களுக்கு இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்ற சிறப்புப் பண்புகளோடு, பெண்களுக்கு **மதி** கூடச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதற்கு வசன ஆதாரம் கேட்டுவிடாதீர்கள். சொல்லார்ந்த ரீதியில் நம் மொழி சார்ந்த விளக்கம் இது. அவ்வளவே! பலமும், துணிவும், செயல் திறனும் ஆண்களுக்கு உரித்தானவைகளாக இருக்கும் நிலையில் அவர்களுக்குச் சறுக்கலும், தோல்வியும் ஏற்படுகிற வேலையில், **மதி நுட்பத்தோடு** காரியங்களை அணுகி தடம் புரண்டதை மீண்டும் எடுத்து நிறுத்தும் ஆற்றல் பெண்களுக்கு இருக்க கூடுமோ? **மதி**க்கு அது தான் காரணமோ?

பரிசுத்த வேதாகமத்திலும் இப்படி மதி நுட்பத்தோடு செயல்பட்ட பல பெண்களைக் காண முடிகிறதே. அபிகாயில் **மகா புத்திசாலி** என்று நம்மால் வாசிக்க முடியும். (1சாமு: 15:23) மோசேயின் மனைவி **சிப்போராளின் மதி நுட்ப செயல்பாட்டை** யாத்திராகமம் 4:24-26 வசனங்களில் நாம் கவனிக்க முடியும். இன்னும் கேனியனான ஏபேரின் மனைவி யகேலின் **சாதுரியத்தையும்** (நியா. 5:25) மனோவா, மனைவியின் **சமயோசிதத்தையும்** (நியா 13:19,23) நாம் வாசித்து அறிய முடியும். மேலும் புதிய ஏற்பாட்டுப் **பிரிஸ்கில்லாளையும்** இந்த வரிசையில் சேர்க்க முடியும். எப்படியெனில் ஆரம்பத்தில் **ஆக்கில்லா, பிரிஸ்கில்லா** என்று அழைக்கப்பட்டவர்கள் (அப். 18:26) பின்னாளில் பிரிஸ்கில்லா, ஆக்கில்லா என்று குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள் (ரோமர் 16:3, 11, தீமோத் 4:19) நாம் இங்கே விவாதிப்பதுபோல **பக்தி வாழ்வில்** அவளுடைய மதி நுட்ப செயல்பாடு இதற்கு காரணமாக இருந்திருக்குமோ? ஆவியானவர் காரணமில்லாமல் இப்படி எழுத அனுமதித்திருக்கமாட்டார் தானே.

ஒரு வேளை திருமதி. பேதுருவின் செயல்பாடு, வேதாகமத்தில் நேரிடையாகக் மேலே குறிப்பிட்ட சில பெண்கள் போன்று இல்லாவிட்டாலும், சில **சிறப்புத் தகுதியம்சங்கள்** திருமதி பேதுருவுக்கு இருந்திருக்க வேண்டுமென்றே தெரிகிறது. அது பற்றி நாம் கிட்டப் போய்ப் பார்ப்பதற்கு முன், நமது வழக்கத்தின்படி இதற்கு தேவையான சில பின்னணித் தகவல்களைச் சேகரிப்போம்.

## பேதுரு திருமனமாணவன் ஆதாரம் – 1

புதிய ஏற்பாட்டின் முதல் மூன்று நற்செய்தியாளர்களும் திருமதி. பேதுரு பற்றி எதுவும் குறிப்பிடாவிட்டாலும், **பேதுருவின் மாமியார்,** சகவீனமாய் இருந்தது பற்றியும், இயேசு அவர் ஜூரம் நீங்கக் கட்டளையிட்டது பற்றியும் உடனே அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தாள் என்பது பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள் (மத் 8:14 மாற்கு 1:30 லூக்கா 4:38) இவர்களிடமிருந்து நமக்கு உறுதிபடக் கிடைக்கும் தகவல் **பேதுரு திருமணமானவர்** என்பது.

சரி, மத்தேயு ஆசிரியரின் கூற்றுப்படி இயேசு ஆண்டவரின் புகழ்மிக்க மலைப் பிரசங்கத்தை முடித்த கையோடு **கப்பர் நகூம்** பட்டணத்துக்குச்சென்றிருக்கிறார் என்று தெரிகிறது (மத் 8:5) இப்பட்டணம் கலிலேயாக் கடலைச் சுற்றியிருந்த பட்டணங்களில் ஒன்று. குறிப்பாக இயேசுவால் தெரிந்துகொள்ளப்பட்ட யோவான், யாக்கோபு, பேதுரு, அந்திரேயா போன்றவர்களுக்கு இது சொந்த ஊர். ஊழியத்தின் பாதையில் இது இயேசுவின் பட்டணமாகவும் மாறிவிட்டது. (மத் 4:13, 9:1, 17:24) . இப்பட்டணத்தில் தான் பேதுருவுக்கும், அந்திரேயாவுக்கும் சொந்தமான வீடு இருந்தது. அண்ணன், தம்பி இருவரும் ஒரே வீட்டில் குடியிருந்திருக்கிறார்கள் (மாற்கு 1:29) நம்முடைய கலாச்சாரத்தின் ஓர் அங்கமாக புதிய ஏற்பாடு இருக்கிறபடியால் இதை புரிந்துகொள்வதில் நமக்குத் பெரிதாக சிரமம் இல்லை.

இயேசு பேதுரு, அந்திரேயா வீட்டிற்குச் சென்றபோது யோவான், யாக்கோபு உடன் சென்றுள்ளனர். இந்த வீடு பிறரை ஏற்று உபசரிக்கும் ஒரு வீடாக இருந்திருப்பதுபோல் தெரிகிறது. அங்கே பேதுருவின் மாமியாரின் சுகவீனம் பற்றி இயேசு அறிந்து, அவர் பரம வைத்தியராக இருக்கிறபடியால் உடனடியாக சுகம் தந்தார். **அவள் அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்** என்று வாசிக்கிறோம். (மாற்கு 1:31). இயேசுவுக்கு பணிவிடை செய்யவே பெத்தானியா மார்த்தாளுக்கு **மரியாளின் உதவி** தேவைப்பட்டிருக்கும்போது (லூக் 10:40) இயேசுவோடு சென்ற ஒரு கும்பலுக்கு **பேதுருவின் மாமி** மட்டும் பணிவிடை செய்திருக்க முடியாது. அப்படியானால் உபசரிக்கும் குணம் கொண்ட அவ்வீட்டுப்பெண்கள் எல்லாரும், அவர்களுக்கு திருமதி.பேதுரு உட்பட அதில் ஈடுபட்டிருக்க வேண்டும். அப்படித்தானே !

இவை தவிர **திருமதி. பேதுரு** பற்றிய **நேரிடையான தடயம்** 1 கொரி 9:5ல் நமக்குக் கிடைக்கிறது. **மற்ற அப்போஸ்தலரும் கர்த்தருடைய சகோதரரும், கேபாவும் செய்கிறதுபோல மனைவியாகிய ஒரு சகோதரியைக் கூட்டிக்கொண்டு திரிய எங்ளுக்கும் அதிகாரமில்லையா? கேபாவாகிய பேதுரு** திருமணமானவர் என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை. பேதுருபோல வேறு சில அப்போஸ்தலரும் திருமணம்

ஆனவர்களாகவே இருந்துள்ளனர். இப்பகுதியில் அப்போஸ்தலன் பவுல் தன் அப்போஸ்தலத்துவத்தைக் கேள்வி கேட்பவர்களுக்குப் பதில் தருகிறார். இப்பதிலில் நமக்கு சில கூடுதல் தகவல்களும் கிடைக்கிறது. அது **கர்த்தருடைய ஊழியத்தை செய்பவர்களை சபையானது தாங்கவேண்டுமென்பது.** மற்ற அப்போஸ்தலரும் கர்த்தருடைய சகோதரரும் **கேபாவும்** தங்கள் **மனைவிகளோடு** ஊழியத்தினிமினித்தம் எங்கெல்லாம் சென்றார்களோ அங்கெல்லாம் அவர்களுக்கு உதவி கிடைக்கிறதாகவே தெரிகிறது. பர்னபாவும் பவுலும் இந்நிலைக்கு விதிவிலக்காக கைத்தொழில்செய்து ஊழியம்செய்திருந்தாலும் ஊழியத்தி னிமித்தம் உதவி பெறுவது நியாயப்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாக வேண்டுமென்று கர்த்தரின் கட்டளையாக உள்ளது. (1 கொரி 9:14)

இப்பின்னணித் தகவல்களையயும் வேறு சில வசனப் பகுதிகளையும் கொண்ட திருமதி பேதுரு மூலமாக நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று பார்ப்போம்.

## பேதுரு திருமணமானவன் ஆதாரம் 2

### திருமதி பேதுரு மூப்பரின் மனைவியாயிருந்தாள்

திருமதி பேதுரு மூலமாக நமக்குக் கிடைக்கும் முதல் பாடம் சபை பொறுப்பிலுள்ளவர்களின் **மனைவிமார்க**ள் சபைக்கு எப்போதும் பக்கபலமாக இருக்க வேண்டும் என்பது.

பேதுருவுக்கு மனைவி இருந்தாள் என்பதற்கான அசைக்க முடியாத ஆதாரங்களில் மேலும் ஒன்று, பேதுரு கர்த்தருடைய **சபையின் மூப்பர்களில்** ஒருவராக இருந்தார் என்பது **உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பர்** என்று கூறுகிறார். (11 பேதுரு 5:1) மூப்பருக்கான தகுதிகள் 1 **தீமோதேயுவிலும்** தீத்துவிலும் பட்டியலிடப்பட்டிருக்கிறது. குற்றம்சாட்டப்படாதவன் **ஒரே மனைவியை உடைய புருஷன்** ஜாக்கிரதை உள்ளவன். தெளிந்த புத்தியுள்ளவன் யோக்கியதை உள்ளவன். **அந்நியரை உபசரிக்கிறவன்**, போதக சமர்த்தன் தன் இஷ்டப்படி செய்யாதவன். முற்கோபமில்லாதவன். அடியாதவன், இழிவான ஆதாயத்தை இச்சியாதவன், **சண்டை பண்ணாதவன்**, நல்லோர்மேல் பிரியமுள்ளவன், நீதிமான், பரிசுத்தவான் இச்சையடக்கமுள்ளவன், ஆரோக்கியமான உபதேசத்தினால் புத்தி சொல்லுபவன், உண்மையான வசனத்தை நன்றாய் பற்றிக்கொள்ளுகிறவன் **தன் சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவன் நல்லோமுக்கமுள்ள பிள்ளைகளை** உடையவன் என்று பட்டியலில் நீள்கிறது. (1 தீமோ 3, மற்றும் தீத்து 1)

அது சரி, இந்த **பக்தி** பட்டியலுக்கும் **திருமதி பேதுருவுக்கும்** என்ன சம்பந்தம் என்கிறீர்களா ? நியாயந்தான். ஆனால் இப்பட்டியலை உங்கள் கண்களை அகலவிரித்து மீண்டும் ஒருமுறை படியுங்கள். அதிலுள்ள அந்நியரை உபசரிக்கிறவன் **சண்டை பண்ணாதவன்,** தன் **சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவன்.** பிள்ளைகளை **நல்லொழுக்கத்தில் வளர்ப்பவன்** ஆகிய இவைகள் **ஒரு மனைவியின்** ஒத்துழைப்பில்லாமல் குடும்பத்தில் இது சாத்தியம் என்று எண்ணுகிறீர்களா? வாய்ப்பே இல்லை! அப்படி ஏதாவது குறைகள் இருந்திருக்குமானால் **பேதுரு** ஆதிச்சபையின் **மூப்பர்களில்** ஒருவராக இருந்திருக்க முடியுமா ? சபையார் விட்டிருப்பார்களா? குற்றம் சாட்டி வெளியேற்றியிருக்க மாட்டார்களா? ஒருவேளை அவர்கள்தான் சிலவற்றை சகித்திருந்தாலும் ஆதிச்சபையில் தேவன் இப்படிப்பட்ட ஒழுங்கீனத்தை அனுமதித்திருப்பாரா? சான்சே இல்லை.

அப்படியானால் இதிலிரந்து என்ன தெரிகிறது? தேவன் தனக்குக்கொடுத்த மாபெரும் மூப்பர் **பொறுப்பை** நிறைவேற்றுவதற்கு **திருமதி பேதுரு** உற்ற துணையாய் இருந்துள்ளாள். **சில உறுப்பினர்** உள்ள **ஒரு குடும்பத்தை** சச்சரவு இல்லாமல் நடத்துவதே கடும் சவாலாக இருக்கும்போது **அதிகமான அங்கத்தினர்களைக்கொண்ட** சபையை தேவனுக்குப் பிரியமாக நடத்துவது என்ன இலேசானதா? **திருமதி பேதுருவின்** அடக்கமும், சாந்தமும், சாதுரியமும், **உபசரிப்பும்** கண்டிப்பும் **பேதுருவுக்கு** எல்லா வகையிலும் **கைகொடுத்துள்ளது.**

ஆகவேதான் 1 பேதுரு 3:1-6, வசனப்பகுதியில் **மனைவிமார்கள்** எப்படிப்பட்ட நடக்கையுள்ளவர்களாக இருக்கவேண்டும். எது தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது என்று திருவாளர் பேதுரு நெஞ்சை நிமிர்த்தி குற்றமற்ற மனசாட்சியோடு எழுத **பரிசுத்த ஆவியானவர்** அனுமதி கொடுத்துள்ளார். ஆகவே **திருமதி பேதுருவை** ஒரு சிறந்த முன்னுதாரணமாக எடுத்து பக்தி வாழ்வை அமைத்து ஊழியக் காரியங்களைத் தாங்குவது நல்லது.

### 11 திருமதி பேதுரு உபசரிக்கு ம் மனைவியாயிருந்தாள்

**திருமதி பேதுரு** மூலமாக நமக்குக் கிடைக்கும் **இரண்டாம் பாடம்.** மனைவியமார்கள் விருந்தோம்பல் உள்ளவர்காக இருக்க வேண்டும் என்பது.

**உபசரித்தல்** அல்லது விருந்தோம்பல் என்பது இயேசுவின் சீடர்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படைப் பண்புகளுள் ஒன்று. **விருந்தினர்களையும், அந்நியரையும்** முகமலர்ச்சியோடு வரவேற்று. அவர்களின் தேவைகளை மனதாரப் பூர்த்தி செய்வது தான் விருந்தோம்பல். மத்தேயு இருபத்தைந்தாம் அதிகாரத்தின் **நியாயத்தீர்ப்புக் காட்சியில்** வலது

பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து.... **பசியாயிருந்தேன்,** எனக்கு போஜனம் கொடுத்தீர்கள், **தாகமாயிருந்தேன்** என் தாகத்தை தீர்த்தீர்கள். **அந்நியனாயிருந்தேன்** என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள் என்றார். (மத் 25:35) இன்றும் பவுலடியார் ரோமாரியருக்கு எழுதும் போது **பரிசுத்தவான்களுடைய குறைவில்** அவர்களுக்கு **உதவி செய்யுங்கள்.** அந்நியரை **உபசரிக்க நாடுங்கள்.** இது கிறிஸ்தவர்களுக்கான கட்டளை.

**அந்நியரை உபசரிப்பது** (1 தீமோ. 3:1, தீத்து 1) மூப்பர்களுக்கான தகுதிகளில் ஒன்றாக இருக்கிறபடியால் ஆதிச்சபையின் ஒருவராகயிருந்த பேதுரு இச்செயலில் குறையற்றிருந்ததற்கு **அவன் மனைவியின் செயல்** முக முக்கியமானதாக இருந்திருக்க வேண்டும். **தீமோதேயு** பற்றி கூறும்போது அந்த விசுவாசம் உன் **பாட்டியாகிய** லோவிசாளுக்குள்ளும், **தாயாகிய** ஐனக்கேயாளுக்குள்ளும் இருந்தது என்று சொல்லுவது போல் திருமதி **பேதுருகுள்ளாக** அந்த உபசரிப்பு குணம் **அவள் தாயாரிடத்திலிருந்து** வந்திருக்க வேண்டும். எப்படியெனில் **திருமதி பேதுருவின்** தாய் ஜுரம் நீங்கி சுகம்பெற்றவுடன் **எழுந்து பணிவிடை** செய்திருக்கிறாள். இப்படிப்பட்ட பெண்களே இன்றைக்கு குடும்பத்திலும் சபையிலும் தேவை. இப்படிப்பட்ட குணத்தின் மூலமாக **ஆபிரகாம்,** லோத் போன்றவர்கள் **தேவ தூதரைக்கூட உபசரித்திருக்கிறார்கள்.** (ஆதி 18:118- 19:1-11) உபசரிக்கும் குணத்தில் திருமதி பேதுரு தோற்றுப்போயிருந்தால் திருவாளர் பேதுரு ஒருவெற்றிகரமான **மூப்பராக** இருந்து ஆதி **சபையைவழி நடத்தியிருக்க முடியாது.**

அருமையானவர்களே கிறிஸ்தவத்தில் **உபசரிக்கும்** குணம் எந்த அளவில் உள்ளது ? எந்தளவில் உள்ளது என்பதைவிட எங்காவது உள்ளதா என்று கேட்கவேண்டிய நிலையே காணப்படுகிறது. எபிரேயர் ஆசிரியர் கூறும்போது போது **அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்** என்று கூறுகிறார். எபி. 13:2 அந்நியர் என்றால் **அறிமுகம் இல்லாதவர்கள் என்று அர்த்தம்.** ஆனால் **சொந்த குடும்பத்தி**ல் உள்ளவர்கள், சொந்த குடும்பத்திற்கு **சம்மந்த மானவர்களின்** நிலையே. குறிப்பாக குடும்பத்தில் உள்ள **முதியோர்களின் நிலையே** பரிதாபத்திற்குரியதாயிருக்கும் போது அந்நியரைப் பற்றி பேசுகிறீர்களே என்று முகம் சுழிக்கிறீர்களா? உண்மைதான் தங்களை **பக்தி உள்ளவர்கள்** என்று பீற்றுக்கொள்ளும் அநேகர் இக்காரியத்தில புத்தி இல்லாதவர்களாவே உள்ளனர். **யாக்கோபு** ஆசிரியரின் வசனம் நம் காதுகளில் எப்போதும் ரீங்காரம் இடுவது நல்லது. **நியாயப்பிரமாணம் முழுவதிலும் கைகொண்டிருந்தும் ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாகவே இருப்பான்.** யாக் 2:10 என்பது ஆகும்.

ஆகவே **திருமதி பேதுரு** போல உபசரிக்கும் குணம் கொண்டு ஊழியத்தையும் நம்

ஆத்துமாவையும் காப்பாற்றி நித்திய பாக்கியததை உறுதி செய்வோம்.

## 111 திருமதி போதுரு ஊழிய பணியில் துணை நின்றதால்

திருமதி போதுரு மூலமாக நம்மால் அறிந்துகொள்ள முடிகின்ற இன்னொரு பாடம் மனைவிமார்கள் ஊழியப் பணியில் தன் கனவன்மார்களை ஊழியத்தில் **ஊக்குவிக்கிறவர் களாக** இருக்க வேண்டும் என்பது ஆகும்.

**ஊக்குவிப்பு** என்பதில் பொருள் **நம்பிக்கை** அளிப்பது, ஊழியத்தில் மேம்பட உதவுவது **சோர்வில்** பெலப்படுத்துவது திருவாளர் பேதுருவின் தோளின் மீது இரண்டு பாரங்கள் சுமத்தப்பட்டிருந்தது. 1) **ஊழிய பணி** 2) **மூப்பர் பணி** ஊழிய பணி கிறிஸ்துவின் **பிரதான கட்டளையாக** கொடுக்கப்பட்டிருந்தது.

**மூப்பர் பணி கிறிஸ்துவின் சபையால்** அவர் மீது ஏற்றப்பட்டிருந்தது. ஊழியத்தின் பாதையில் அவர் **சந்தித்த சவால்கள், அச்சுறுத்தல்கள்** அதிகம் (அப். 4:3, 5:40, 12:3). மூப்பர் பணியும் சாதாரமானது அல்ல. **முறுமுறுப்பு** என்பது பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலுக்கு மட்டும் சொந்தமானது என்று எண்ண வேண்டாம். **புதிய ஏற்பாட்டுக்** கிறிஸ்தவர்களுக்குள்ளும் இது தொடர்ந்தது. (அப் 6:1) **முறுமுறுப்பவர்களைக்** கையாள்வது பொதுவாக கடினமான காரியம். நம்மை **எதிர்ப்பவர்களைவிட** இவர்கள் மோசமானவர்கள். பேதுரு இந்த இரண்டு பணிகளையும் வெற்றிகரமாகச்செய்துள்ளான். திருமதி பேதுரு ஊக்குவிப்பவராக இருந்திருக்காவிட்டால். பேதுரு கண்டிப்பாக தேவனுக்கு பிரியமான முறையில் காரியங்களை செய்திருக்க முடியாது. ஆகவே ஊழிய **சிந்தையும்,** ஊழிய **வாஞ்ஜையும்,** ஆத்தும **பாரமும்,** சகிப்பு தன்மையும் **திருமதி பேதுருவுக்கு** இருந்தது என்பதை உறுதியாக கூறலாம்.

பவுல் அடியார் கொரிந்தியருக்கு எழுதும்போது மனைவியாகிய ஒரு சகோதரியை கூட்டிக்கொண்டு திரிய என்கிறார். (1 கொரி 9:5) அதன் அர்த்தம் **போதுரு சென்ற** இடங்களுக்கெல்லாம் **திருமதி பேதுருவும்** ஈடுகொடுத்து சென்றுள்ளாள். இதே பேதுரு 1 பேதுரு 3:7ல் **பெண்கள்** பெலவீன பாண்டம் என்கிறார். **பெலவீண பாண்டமாகி**ய இந்த திருமதி பேதுரு **அலைந்து திரிந்த** இடங்களுக்கெல்லாம் சென்றுள்ளான். அந்நாட்களில் பயணங்கள் எப்படி இருந்திருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். ஆயினும் இந்தத் திருமதி **சௌகரியத்தைப்பற்றி** கவலைப்படாமல் கூடச்சுற்றி பேதுருவை ஊழியத்தில் **ஊக்கப் படுத்தியுள்ளாளே!**

அருமையானவர்களே! இன்றைய நாட்களின் நிலை என்ன ? திருமதி பேதுரு ஓர் ஊக்குவிப்பாளராக ஊழியப் பணியில் ஈடுபடுத்தினவளாக இருந்திருந்தால், அதற்கு

பேதுருவிடம் இருந்த **வேத அறிவு** காரணமாக இருந்திருக்க வேண்டும். **வசனத்தை** நிதானமாக பகுத்துப்போதிக்கிறவர்களாக இருக்க வேண்டும். (1 தீமோ. 2:15) இன்னும் பெரேயா பட்டணத்ததுக் கிறிஸ்தவர்கள்போல வேத வாக்கியங்களை ஆராய்கிறவர்களாக இருக்க வேண்டும். (அப். 17:11) **திருமதி பேதுரு** போன்ற ஊக்குவிப்பாளர்ல்கள் இல்லாமல் எத்தனை ஊழியக்காரர்கள் வீணாகிப்போய் எத்தனை சபைகள் பாழகியிருக்கும் தெரியுமா ?

ஆக **ஊழியப் பணியில்** துணை நிற்கும் **சகோதரிகள்** கர்த்தருடைய வேலைகாரரின் **மனைவிமார்கள்** சபையிலிருக்கும் **பெண்கள்** தங்கள் பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து செயல்படுவது நல்லது. நம்முடைய செயலுக்கான பலன் கிடைக்க வேண்டுமென்று ஆசைப்பட வேண்டாம். **திருமதி பேதுருவின்** பெயர் வேதாமத்தில் இல்லை ஆனாலும் இந்த திருமதி பேதுரு பற்றி நாம் இனறு பேசுகிறோமே!. அதுபோல நீங்களும் பேசப்படுவீர்கள். தேவனுடைய கணக்கில் உங்கள் செயல்கள் எல்லாமே இருக்கும். ஆகவே சபையில் உள்ள ஒவ்வொரு கிறிஸ்தவ பெண்களும் **பேதுருவின் மனைவிபோல** இருக்கத் தீர்மானிப்போம்! ஆமென்.

## ONLINE BANKING (NEFT)
## Dr. M G E PUSHPARAJ

**Name : M G E PUSHPARAJ**

**STATE BANK OF INDIA** (SBI) Salem Steel Plant Branch

**A/C No: 10764116842** SWIFT CODE - SBININBB300

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

**A/C No: 1219101013622.** SWIFT CODE - CNRB0001219 -1219101013622.

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622.

# கேள்வி? பதில்!

Dr. Xaviar

**பிதாவாகிய தேவன்தான் மாம்சத்தில் வந்தாரா?**

1 கொரி 8:6ன் படி பிதாவாகிய **ஒரே தேவன்** நமக்கு உண்டு. (எபே 4:6, 1 தீமோ 2:5, 6:15,16 1 கொரி 15:24 யோ. 8:41, 42,42, 1 தீமோ 3:16 சொல்கின்றது. **தேவன் மாம்சத்தில்** வெளிப்பட்டார் என்று. அப்படியானால் பிதாவாகிய ஒரே தேவன்தான் மாம்சத்தில் இயேசுவாக வந்தாரா? அப்படியானால் உபா. 18:18ல் பிதாவானவர் **நானே வருவேன்** என்று ஏன் சொல்லவில்லை? இதுதான் கேள்வி, இந்த சத்தியம் புரிந்துகொண்டால் தேவ பக்திக்குரிய இரகசியம் விளங்கிவிடும் **சாவாமை** உள்ள பிதாவாகிய தேவன் (1 தீமோ 5:16) **சிலுவையில் மரிக்க பூமிக்கு வருவாரா?** ஆவியானவர் தாமே நமக்கு இந்த சத்தியத்தை வெளிப்படுத்துவார்.

**ஆதியிலே வார்த்தை** இருந்தது. அந்த **வார்த்தை தேவனிடத்திலிருந்தது.** அந்த வார்த்தை **தேவனாயிருந்தது.** அந்த வார்த்தை **மாம்சமாகி நமக்குள்ளே** வாசம் பண்ணினார். (1 யோ 1:1, 14,2) **தேவனாயிருந்த** வார்த்தைதான் **மாம்சத்தில் வந்தது** என்று அறிகிறோம். அதனால்தான் **தேவன் மாம்சத்தில்** வெளிப்பட்டார் என்று 1 தீமோ 3:16ல் சொல்லப்பட்டுள்ளது. அப்படியானால் அந்த சூழ்நிலையில் **பிதாவாகிய தேவன்** என்ன செய்தார்? இதுவும் ஒரு கேள்வி

ஜீவனுள்ள **பிதா என்னை அனுப்பினது** போலவும் (யோ 6:57) **என்னை அனுப்பின பிதா** ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான் (யோ. 6:44) ஒன்றான **மெய் தேவனாகிய உம்மையும்** நீர் அனுப்பினவராகிய **இயேசு கிறிஸ்துவையும்** அறிவதே **நித்திய ஜீவன்** (யோ 17:3) பிதா என்னை அனுப்பினதுபோல **நானும் உங்களை அனுப்புகிறேன்.** (யோ. 20:21) அதெப்படியெனில் மாம்சத்தினாலே பெலவீனமாயிருந்த **நியாயப்பிரமானம்** செய்யக் கூடாததை தேவனே செய்யும்படிக்கு தம்முடைய **குமாரனைப்**

**பாவ மாம்சத்தின் சாயலாகவும்**, பாவத்தை போக்கும் **பலியாகவும்** அனுப்பி **அந்த மாம்சத்திலே** பாவத்தை **ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.** (ரோ 8:30 ) காலம் நிறைவேறினபோது **ஸ்திரியினிடத்திற் பிறந்தவரும்** நியாயப் பிரமாணத்துக்கு கீழானவருமாகிய தம்மடைய குமாரனை **தேவன் அனுப்பினார்.** (கலா 4:5) மேலும் தமது **முதற்பேறானவரை** உலகத்தில் பிரவேசிக்க செய்தபோது தேவ தூதர் யாவரும் அவரைத் தொழுது கொள்ளக்கடவர்கள் என்றார். (எபி1:6) பிதாவானவர் **குமாரனை உலக இரட்சகராக** அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம். (யோ 4:14) போன்ற பல வசனங்களை வாசித்தால் **பிதாவாகிய** ஒரே தேவன் **தம்முடைய வார்த்தையாகிய** தேவ குமாரனை **பூமிக்கு மனுஷ குமாரனாய் அனுப்பினார்** என்று அறிகிறோம். அப்படியானால் அதே சமயம் **தேவ குமாரன் பரலோகில் இருந்தாரா?**

யோ 1:1ல் **வார்த்தை** தேவனாயிருந்தது என்று அஃறிணையில் எழுதப்பட்டுள்ளது. ஆனால் யோ. 1:2,3ல் **அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்,** சகலமும் **அவர் மூலமாய் உண்டாயிற்று** என்று **உயர்திணையில்** எழுதப்பட்டுள்ளதால் **வார்த்தை** ஆட்தத்துவமாய் மாறியிருந்தது என்றும் அறியலாம் (எபி 1:2) சங். 2:7 நீதி 30:4 தானி 7:13 ஏசா 7:14 9:6 ஓசி 11:1, மத் 2:15, 3:17 22:45, மாற் 13:32, யோ. 1:18 3:16,17, எபி 1:8, சங் 110:1 போன்ற பல பழையஏற்பாட்டு வசனங்களின்படி **பிதாவின்** குமாரன் **தேவகுமாரன்** என்ற **ஆட்தத்துவமானவர் பரலோகில் இருந்தார் எனவும் அறிகிறோம்** இதை **பழைய ஏற்பாட்டு மக்கள்** அனைவரும் அறிந்திருக்கிறார்கள் அதனால் தான் சமாரியா ஸத்ரியும் **மார்த்தாள் முதற்கொண்டு** அனைவரும் கிறிஸ்துவாகிய **மேசியா வருவார்** என்று நம்பியிருந்தனர், அவரைத் தேவகுமாரன் என்றே நம்பியிருந்தனர். அதனால்தான் பிரதான ஆசாரியன் அவரை நோக்கி **நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா?** அதை எங்களுக்குச் சொல்லும்படி ஜீவனுள்ள தேவன் பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றான் (மத். 26:63, யோ 9:22 10:24) அதற்கு இயேசு **நீர் சொன்னபடிதான் என்கிறாரே** ஆக **பரலோகத்தில் தேவகுமாரனாயிருந்த** கிறிஸ்து **மேசியாவாகிய வார்த்தைதான்** மனுஷகுமாரனாய் **பூமிக்கு வந்தார்** என்று அறிகிறோம்

**பிதாவாகிய ஒரே தேவன்** இயேசுவை பூமிக்கு அனுப்பினார் என்றால் இயேசு ஒரு சாதாரண **சிருஷ்டியைப் போல்** ஆகிவிடுகிறாரே என்று பலர் நினைக்கலாம் யோ 1:1ன்படி ஆதியிலே **வார்த்தை இருந்தது** In the beginning was the word அதாவது **வார்த்தை தானாகவே** இருந்தது word exist அதை யாரும் **படைக்கவே இல்லை** அந்த வார்த்தையாக இருக்கிறவர் **என்ற யேகோவா** நிலைக்கு உட்பட்டது என்று அறிகிறோம். இந்த **வார்த்தையாகிய**

தேவகுமாரன் **தூதனானவராக** பழைய ஏற்பாட்டில் **பல இடங்களில்** வெளிப்பட்டிருக்கிறார் **மோசே, மனாசே, யாக்கோபு** 40 வருட **இஸ்ரேலர்** போன்றோரிடம் **தென்பட்ட தூதனானவரை** கர்த்தர் என்று அந்தந்த நிகழ்ச்சிகளிலே வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. **கர்த்த**ர் என்ற சொல்லுக்கு எபிரேய சொல்தான் யேகோவா Lord ஆக இவர் **தேவன்தான்** இவர் **சர்வ வல்லமையுள்ள தேவனென்று** வெளி 1:8, 4:8, 11:17, 12:14, ரோ 9:6 வெளி 1:1 , 22:6, ஏசா 9:6 யோ. 19:26 1 யோ 5:20 எரோ 1:14 10:10 தீத் 2:13, 2 பேது 1:1 போன்ற பல வசனங்கள் கூறுவதால் **இவர் தேவன்தான். சிருஷ்டிக்கப்பட்டவர் அல்ல** கொலோ 1:5, வெளி 3:14 போன்ற வசனங்களுக்கான விளக்கங்களை **பிதாவாகிய தேவனுடைய வார்த்தைதான்** தேவகுமாரனாகி **மனுஷ குமாரனாயிற்று,** அப்படியானால் அந்த வார்ததை **சிருஷ்டிக்கப்பட்டது என்று சொல்ல முடியுமா?** **முடியாது ! குரானில் கூட அல்லாவின் வார்த்தைதான் ஈசா நபியாய் வந்தார் என்று சொல்லபட்டிருக்கிறது**.

மேலும் **உலகம் உருவாகும் முன்னமே** பாவம் தோன்றாததற்கு முன்னமே வரப்போகிற காரியங்களை **தேவன் சிந்திக்கிறார்.** மனிதனுக்கு இரட்சிப்பளிப்பதற்காய் **இரத்தம் சிந்தப் போகிறேன்** என்று **வார்த்தையாகிய** தேவ குமாரன் தானேதான் **விருப்பத்தை தெரிவித்தார்** இது எபி 10:5லும் சங் 40:6-8 (செப்டுவாஜிந்த்) லும் இருக்கிறது அதனால்தான் **உலகத் தோற்றத்திற்கு முன்னமே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி** என்று வெளி 13:8 சொல்கின்றது. ஆக **பிதாவாகிய தேவன் மாம்சத்தில் வெளிப்படவில்லை என்றும் தன்னுடைய வார்த்தையாகிய தேவ குமாரனைத்தான் அனுப்பினார் என்றும் தன்னுடைய ஆவியாகிய பரிசுத்த ஆவியானவர் தான் இன்றைக்கு நமக்கு தேற்றரவாளராகவும் சுவிஷேசம்பரவ** வழி நடத்துபவராகவும் செயல்படுகிறார் என்றும் அறிகிறோம். ஆக **ஒரே தேவன்** மனித குல **இரட்சிப்பின் நிமித்தம் மூன்று ஆட்தத்துவமாய்** செயல்படுகிறார் என்றும் ஆவியானவர் விளக்கியதற்காய் ஸ்தோத்திரம்.

கேள்வி : - **எல்லா மத சிறுபிள்ளைகளும் பரலோகம் வருவார்களா?**

**பதில் : – நிச்சயம் வருவார்கள்.** உலகில் எல்லா பிள்ளைகளும் கள்ளங்கபடம் அற்றவர்கள்.

கேள்வி : - **மணவாளன் - மணவாட்டி திருமணம் முடித்து வந்தபிறகு தேசப்பற்றோடு ஆண்டவர், கானான் மக்கள் என்றும் வேறு தேச மக்கள் என்றும் பார்ப்பாரா ?**

**பதில் : – கானான் தேசம்** என்து **இஸ்ரேலருக்குத்தான்.** மற்றப்படி **உலக தேசம் முழுவதும் தேவனக்குரியது.** தேவன் படைத்தது. எனவே பரலோகில் ஆட்டுக்குட்டியானவர் திருமணம் முடிந்து வந்த பிறகு, இந்த பூமியில் **தேவன் தேச வித்தியாசமே பார்க்க மாட்டார்.**

கேள்வி :- **அகாலப் பிறவி என்றால் என்ன ?**

**பதில் : – காலப்பிறவி** என்றால் 10 மாதத்தில் பிறப்பது. **அகாலப் பிறவி** என்பது **குறைப் பிரசவம்.** ஆவிக்குரிய ரீதியில் பவுல் 1 கொரி 1:18ல் சொன்னதை பார்த்தால் இயேசுவின் பகிரங்க வருகையில் **இஸ்ரவேலர்** எல்லாரும் இரட்சிக்கப்படுவார். ஆனால் **இஸ்ரவேலன் பவுலோ,** அதற்கு முன்னாலே **முதலாம் நூற்றாண்டிலேயே** இரட்சிக்கப்பட்டுவிட்டான். இதுதான் **அகால பிறவி.**

கேள்வி :– **ஏசா 7:14ல் இம்மானுவேல் என்று பேரிடுவான் என்று உள்ளது. ஆனால் மத்.1:21ல் இயேசு என்று பேரிடப்பட்டதன் விளக்கம் என்ன ?**

**பதில் : –** எபிரேய வழக்கப்படி **இம்மானுவேல்** என்ற சொல் ஒரு பெயரைக் (Title Name) குறிப்பிடாமல் **குணாதிசயத்தை**க் (Character) குறிக்கிறது. எனவே **குணாதிசயம்** சார்ந்த வார்த்தையை வைக்காமல் **இயேசு** எனறு பெயரிடப்பட்டார்கள். இம்மானுவேல் என்றால் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். மத். 1:23

கேள்வி :– **ஏசா 8:2ல் வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்க வேண்டும். சாட்சி ஆகமம் என்றால் என்ன ?**

**பதில் : – இஸ்ரேலருக்கு** மோசேயின் 5 **புத்தகம் தான் வேதம் என்று** (Thorah) இதோடு தேவ மனுஷர்களின் **சாட்சியுள்ள காரியங்களை** வெளிப்படுத்தும் **சாமுவேல், யோசுவா, ரூத், எஸ்தர், யோபு** போன்ற பல ஆகமங்களைப் அல்லது புஸ்தகங்களை படித்து **வேதத்தைப் பற்றி புரிந்துகொள்ள வேண்டும்.** அதைத்தான் சாட்சியின் ஆகமம் அல்லது புஸ்தகம் என்று கூறப்படுகிறது. அந்த அடிப்படையில் தான் நாம் சபையில்கூட **சாட்சி** சொல்கிறோம்.

கேள்வி :– இயேசுவைப்போல் அழகுள்ளோர் யாரு**மில்லை, பூவினில் என்ற பாடலின்படி இயேசு இப்போது அழகாக இருப்பாரா ?**

**பதில் :–** அப்படி **அழகாய் இருந்தவர் தானே,** நம் பாப **சாபங்களால்** அந்தக்கேடு அடைந்தார். **அழகில்லாமல் போனார்** (ஏசா. 5:3) **காயங்களின் தழும்புகளோடு** இருப்பார். அப்படியிருக்க எப்படி முன்புபோல **அழகாய் இருப்பார்** என்று எண்ண முடியும்? அவரின் சரியான முகத்தை அவர் வரும்போது பார்த்துக்கொள்ளலாம்.

கேள்வி :– **திருவிருந்தில் அப்பத்தை இயேசுவின் சரீரம் என்றும், ரசத்தை இயேசுவின் இரத்தம் என்றும் கூறலாமா?**

**பதில் :–** கூறக்கூடாது. அப்பம், இயேசுவின் சரீரத்திற்கும், **ரசம்,** இயேசுவின் இரத்திற்கும் **அடையாளமாய்தான்** இருக்கிறது என்று விசுவாசிக்க வேண்டும். அப்பம் **சரீரமல்ல,** ரசம் **இரத்தமுமல்ல.**

கேள்வி :- **மாற் 16:15ன் படி சர்வ சிருஷ்டிக்கும் எப்படி சுவிஷேசம் சொல்ல முடியும் ?**

**பதில் :- சுவிசேஷம்** என்பது **மனிதர்களுக்கு மட்டும்தான்.** இங்கே மனிதர்களுக்கான இரட்சிப்பின் சுவிசேஷத்தை உலகமெங்கும் சொல்லவேண்டுமென்றால் உலகிள்ள சர்வ **மனிதப் படைப்புகளுக்கும்** சொல்ல வேண்டும் என்று பொருள்படும்.

கேள்வி :- **கிறிஸ்தவ பிள்ளைகள் பிறந்தநாள் கொண்டாடலாமா?**

**பதில் :- நன்றி** தெரிவிக்கும் வண்ணமாக **கொண்டாடுவதில் தவறில்லை.** மற்றபடி கொண்டாட வேண்டுமென்று வேதத்தில் கட்டாயமில்லை.

கேள்வி :- **மத் 6:34 நாளைய தினம் தன்னுடையவைகளுக்காக கவலைப்படும் விளக்குக.**

**பதில் :- மறுநாளைப்** பற்றியோ, **எதிர்காலம்** பற்றியோ கவலைப்பட வேண்டாம். **பறவைகள் கவலைப்படவில்லையே** (மத் 6:25) அந்தந்த நாளைய தினத்தில் கவலைப்பட்டால் போதும். **நாளைய தினம்** அதற்கேற்ற கவலைகள் வரும். அந்த கவலை இன்று நமக்கு வேண்டாம். இங்கே வசனத்தில் வருவது நாளுக்கு வரும் என்றல்ல. **நமக்கு வரும்** என்று பொருள் அதற்காக **எதிர்காலத்திற்காக திட்மிடக் கூடாது** என்று இயேசு சொல்லவில்லை.

கேள்வி :- **ஏசா. 9:6ல் நித்திய பிதா என்று இயேசு நாமம் தரிக்கப்படுகின்றார். பிதா பூமிக்கு வரவில்லை என்று எப்படி சொல்கின்றீர்கள் ?**

**பதில் :-** இந்தப் நித்திய பிதா என்ற பெயர் நமக்கு கொடுக்கப்பட்ட குமாரனுக்கு உரியது. ஆக **பிதா** குமாரனை **அனுப்பியிருக்கிறார்.** (ரோ. 8:3, கலா. 4:5, யோ. 6:57, 17:3, 20:21 , 1யோ. 4:14) **பிதா வரவில்லை** என்பது உறுதி. இதை முதல் கேள்வி பதிலேயே வாசித்து அறியலாம். **இந்தப் பெயர்** இயேசுவுக்கான காரணப்பெயர் ஆகும். **நித்திய பிதா** என்றால் The Father of the eternity. Planer of ages. Father of all time என்று பல அர்த்தங்கள் உண்டு. எபி .1:2, யோ 1:3 போன்ற பல வசனங்களின்படி இந்தக் குமாரன் மூலமாய்த்தான் **சகல காலங்களும்,** சகல **சிருஷ்டிப்புகளு**ம் வந்தன. அந்த அர்த்தத்தில் தான் இந்த **காரணப்பெயர் உணடானது.** இவர் பிதாவானால் **பிதாவே வந்திருக்கிறார்** என்று சொல்லியிருக்கலாமே ! **குமாரன் கொடுக்கப்பட்டார்** என்று ஏன் சொல்ல வேண்டும்? சிந்தியுங்கள்.

கேள்வி :- **இரட்சிக்கப்பட்ட பெண் திருமணமான கணவரை விட்டு பிரிந்து வாழ்வது சரியா ?**

**பதில் :-** பரிந்து வாழும் **காரணம் தெரியாமல்** பதில் எப்படி சொல்வது? கணவனேகூட அவளை **விரட்டியிருக்கலாம்** அல்லது **ஒதுக்கி வைத்திருக்கலாம். அவிசுவாசியான** கணவனானாலும் அவன் **பாவியானாலு**ம் அவனைவிட்டு **விசுவாசியான மனைவி** பிரியக்கூடாது. இறுதிவரை அவனோடு வாழ்ந்து அவள் தனது நடவடிக்கைகள் மூலமாக அவன் மாற வேண்டும். 1 பேதுரு. 3ப்1-4. மற்றபடி அவிசுவாசியே **விருப்பப்பட்டு தள்ளிவிட்டால்** விவாகரத்து செய்து கொள்ளலாம். வேறு வழியில்லை.1 கொரி 7:10-17ஐ தியானியுங்கள்



## ஓட்டத்தை வெற்றிகரமாக முடித்து கர்த்தரின் பாதம் சென்றடைந்த முன்மாதிரி மிஷனரி ஆயர் Rev. எலியாஸ்

Rev. Dr. **எலியாஸ்** அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் **ஆலங்கோடு** என்ற ஊரை சேர்ந்தவர். இவர் தன் 89ம் வயதில் **கொல்லி மலையில்** ஊழியம் செய்து கொண்டிருந்தபோது **கொரோனா தொற்றால்** பாதிக்கப்பட்டு 2021 மே மாதம் 6ம் தேதி நித்திய ராஜ்யத்துக்குள் பிரவேசித்தார்.

மிஷனரி பிராண்ட் அம்மையார் ஆசைப்பட்டதுபோல **தன் மரணமும்** சம்பவிக்கவேண்டும் என்று Rev. எலியாஸ் அவர்கள் ஆசைப்பட்டார். அதாவது இயேசுக்காய் சுவிசேஷம் அறிவிக்கப்படாத **மலைப்பகுதியிலேயே** சுவிசேஷம் அறிவித்து ஊழியம் செய்து **அந்த மலைப்பகுதியிலேயே மரணம் அடைய வேண்டும்** என்ற **பிராண்ட் அம்மமையாரின்** வாஞ்ஜைப்படி பிராண்ட் அம்மையாரும் **மரித்தார்.** அவரைப்போலவே Rev. எலியாஸ் அவர்களும் ஆசைப்பட்டு அந்த ஆசையை **கொல்லி மலையில்** நிறைவேற்றப்பட்டது ஒரு சரித்திர நிகழ்வு ஆகும்.

Rev. எலியாஸ் அவர்கள் சாட்சியோடு வாழ்ந்து **அன்னபாய் அம்மையாரை** திருமணம் செய்து 5 பிள்ளைகளை பெற்று 5 பிள்ளைகளும் மிக உயர்ந்த பட்டதாரிகளாக படிக்க வைத்து அத்தனை பிள்ளைகளும் சாட்சியுள்ள பிள்ளைகளாக வளர்த்தியதில் **Mrs. அன்னபாய் அம்மையாரின்** பங்கு மிகச் சிறப்பானது. ஆசிரியைப் பணியில் வந்த சம்பளத்தில் வாழ்ந்து பிள்ளைகளை கஷ்டப்பட்டு படிக்க வைத்தும், அத்தனை பிள்ளைகளையும் ஊழியத்தில் பங்குகொள்ள வைத்ததும் **சிறப்பான சாட்சியாகும்.** அதில் ஒரு மகன் **IEM மிஷனரி** ஸ்தாபனத்தின் பொது செயலாளராகவும், மற்றொரு மகன் **புற்றுநோய் ஆராய்ச்சி நிபுனராகவும்** பணி செய்து ஊழியம் நிறைவேற்றுகிறார்கள். இப்படி எலியாஸ் ஐயா பெற்ற பிள்ளைகள் அத்தனை பேரும் சாட்சியுடன் வாழ்கிறார்கள்.

### மிஷனரிகளுக்கு முன் மாதிரியானவர்
### மிஷனரி ஸ்தாபன தலைவர்களுக்கும் முன் மாதிரியானவர்.

**கன்னியாகுமரி** CSI டையோசிஸ்ஸீல் முதலாவதாக **டையோசிஸ் பெயரில்** மிஷனரி ஸ்தாபனத்தை தொடங்கிய பெருமை **எலியாஸ் ஐயா** அவர்களையே சேரும். பிஷப்

Rt. Rev. I.R.H. **ஞானதாசன்** அவர்களிடம் **கிழக்கு தொடர்ச்சி மலை ஆதிவாசிகளுக்கு** சுவிசேஷம் அறிவிக்கப்படவில்லை, நான் **சபை ஆயர் பணியை** விட்டுவிட்டு மிஷனரியாக ஊழியம் செய்ய ஆசைப்படுகிறேன் என்றார். அன்று பிஷப் ஞானதாசன் அவர்கள் **ஆயர் எலியாஸ்** அவர்களை ஊக்குவித்து **மிஷனரி பணிக்கு அனுப்பிவைத்தார்.** அப்படி ஆரம்பிக்கப் பட்டதுதான் DMPB (டையோசிஸ் மிஷனரி ஜெப ஐக்கியம்) இன்று இந்த ஊழியம் **கல்ராயன் மலை** – கொல்லி மலை – ஏற்காடு மலை என்று DMPB மிஷனரி ஊழியம் வளர்ச்சியடைந்துள்ளது. ஆங்காங்கு நல்ல ஆலயங்களும் கட்டப்பட்டது.

Rev. எலியாஸ் அவர்கள் ஆரம்பத்தில் இந்தியாவின் **முதல் மிஷனரி ஸ்தாபனமான** NMSல் இணைந்து **ஜவ்வாது** மலைகளில் ஊழியத்தை தொடங்கினார். கல்ராயன் மலை பகுதிகளில் ஊழியம் செய்ய ஆட்கள் யாரும் இல்லாத நிலையில் 1977ம் ஆண்டு **கல்ராயன் மலை** மிஷனரி ஊழியத்தை துடங்கினார்.

**கல்ராயன் மலை** ஊழியத்தின் ஆரம்பத்தில் இவர் **தங்க இடம் இன்றி** ஒரு வீட்டின் வராண்டாவில் தங்கி ஊழியம் தொடங்கினார். உண்மையான ஆத்தும பாரம். **படுக்கை** வசதி, **தங்கும்** வசதிகளை எதிர்பார்க்கவில்லை. ஐயா அவர்கள் கல்ராயன்மலையில் **தேக்கம்பட்டு** மலை கிராமத்தில் **வீட்டு வராண்டாவில்** தங்கி ஆரம்பித்த அந்த ஊழியம் ஐயாவின் முயற்சியால் கிராமத்தின் சாயலே தெரியாத அளவு பெரும் வளர்ச்சியுற்றது.



Rev. எலியாஸ் அவர்கள் ஊழியம் செய்து தான் ஓய்வுபெறும் கடைசி நாள் வரை குடியிருந்த குடிசை

Rev. **எலியாஸ்** அவர்கள் மாவட்ட ஆட்சியர் (கலெக்டரிடம்) சென்று **தானும் – தன் மனைவியும்** அந்த கிராமத்தில் தங்கவும் அந்த மக்களுக்காக **இலவசமாக கல்வி கற்றுக்கொடுக்கவும்** அனுமதிக்க வேண்டும் என்று முறைப்படி விண்ணப்பம் செய்து அனுமதி பெற்று **பள்ளிக் கூடங்களை உறுவாக்கினார். எலியாஸ் ஐயாவும்** அவர் துணைவியாரும் **எளிமையான** சிறு **குடிசையில் குடியிருந்து,** காட்டுக்குள் உள்ள கிராம மக்கள் நீண்ட தூரம் நடந்து வந்து கல்வி கற்க இயலாது என்று **100 பிள்ளைகள் தங்க,** படிக்க தங்கும் விடுதிக்கு ஏற்பாடு செய்து அந்த பிள்ளைகள் **சாப்பிட, உடுத்த யூனிபார்ம்,** பிள்ளைகளின் மற்ற தேவைகள் சந்திக்கப்பட **KNH ஸ்தாபனத்தோடு** தொடர்பு கொண்டு நல்ல **ஏற்பாடுகளை** செய்து முடித்தார். **தன் குடிசைக்கு** அருகிலேயே இயேசுவை ஏற்றுக்கொண்ட கிறிஸ்தவ விசுவாசிகள் ஆராதிக்க **நல்ல ஆலயம் கட்டி முடித்தார்.**

கல்ராயன் மலை கிராமங்களுக்குளும் சில இடங்களில் **ஆலயங்களை கட்ட** ஏற்பாடு செய்தார். **ஞாயிற்றுக்கிழமைகளில்** ஆலய மணிகள் **பல கிராமங்களில் ஒலித்தது.** அந்த சத்தம் கேட்க இன்பமாக இருந்தது.

நானும் மூன்று முறை **இலவச மருத்துவ** முகாம் நடத்தி சுவிசேஷம் அறிவித்தேன். இரண்டு முறை சுற்று வட்டார கிராம மக்களை **வரவழைத்து** 3 **நாள் கூட்டத்தை** நடத்தி அந்த **மூன்று நாட்களும்** அத்தனை மக்களுக்கும் மூன்று வேளை சாப்பாடு ஏற்பாடு செய்திருந்தார். அங்கு **ஊழியம் செய்யும் ஊழியர்களுக்கு** என்று **சிறப்பு கூட்டம்** ஏற்பாடு செய்து அவர்களுக்கு நான் கர்த்தரின் செய்தி பகிர்ந்துகொண்டேன். இப்படியாக அவரின் **அருட்பணி கல்ராயன் பகுதியில் மிக சிறப்பாக அமைந்தது.**

இதில் **சிறப்பு அம்சம்** என்வென்றால் அத்தனை புதிய **கட்டிடங்களும், பள்ளிகூடங்களும், விடுதிகளும்** கட்ட ஏற்பாடு செய்தவர் **தான் தங்க ஒரு குருமணைகூட கட்ட விரும்பவில்லை.** முதலாவதாக தங்கிய **அதே குடிசையில்தான் கடைசிவரை** குடியிருந்தார். எத்தனை எளிமை!

இன்றைய **மெயின் லைன்** சபைகளின் மிஷனரி **பொது செயலாளர்களின்** வாழ்கையை பாருங்கள். அதில் குறிப்பிட்ட ஒரு CSI டையோசிஸ்ஸீன் மிஷனரி **பொது செயலரின்** கோடி ரூபாய் பெறுமானமான **விலை உயர்ந்த** இரண்டு கார்கள், **பங்களாக்கள்,** பொது செயலாளரான பின் **அவர் பிள்ளைகளுக்கு கட்டிக் கொடுத்த** பங்களாக்கள், சொத்துக்களின் எண்ணிக்கை மிக அதிகம். மிஷனரி பணிக்கு காணிக்கை கொடுத்தவர்கள் பெரும்பாலனவர்கள். அதை அறிந்து வரிசையாக **புள்ளி விவர** கணக்குகளை அறிவிக்கிறார்கள். இவரோடு Rev. **எலியாஸ்** அவர்களை ஒப்பிட்டு பாருங்கள். கர்த்தர் கணக்கு கேட்பார் என்ற பயம் இல்லை இவர்களுக்கு.

## கொல்லி மலை ஊழியம்

Rev. **எலியாஸ்** அவர்கள் **கல்ராயன்** ஊழியத்திலிருந்து ஓய்வு பெற்றபின் **பிராண்ட்** மிஷனரி அம்யைார் கடைசியாக ஊழியம் செய்த இடத்தையும் எலியாஸ் ஐயா அவர்கள் கவணித்தார். பிள்ளைகள் யாவரும் எலியாஸ் ஐயாவிடம் ஓய்வு பெற்றபின் **இனி எங்களோடு** தங்கியிருங்கள் என்றார்கள். எலியாஸ் ஐயா அவர்கள் இசையவில்லை. **கொல்லிமலையில்** ஆதிவாசி பிள்ளைகள் தங்கி படிக்க **விடுதியும்** ஒரு ஆஸ்பத்திரியும் கட்டி இரண்டு **டாக்டர்கள்** இப்போது அங்கு **பணியாற்றுகிறார்கள்.** இந்த **ஆஸ்பத்திரிக்காக** அவர் **அலைந்த அலைச்சல்** எனக்கு நன்றாக தெரியும். இனி அவருக்கு பின் **அந்த ஊழியங்களை** தொடர்ந்து ஏற்று நடத்த **தியாக எண்ணம்** உள்ளவரும் **ஊழிய பாரம்** உள்ளவர்கள் தேவை. பல முறை ஐயா அவர்கள் என்னை **கொல்லி மலைக்கு** அழைத்தார். ஆனால் என்னால் அங்கு போக நேரமில்லாது போனது. அவர் பிள்ளைக்காக பேரப்பிள்ளைகளுக்காக அவர் விட்டுப்போன ஊழியங்களுக்காக ஜெபிப்போம். எலியாஸ் அவர்களின் 55 வருட மிஷனரி சேவைக்காக தேவனை துதிக்கிறேன். ஜெபிப்போம்.

## மார்தாண்டம் சகோ. **Y.JOHNS** அவர்கள்

## கர்த்தருக்குள் நித்தரையடைந்தார்



மார்தாண்டத்தில் சகோ Y.JOHNS அவர்கள் தன் 89வது வயதில் வியாதி படுக்கையில்லாமல் நல்ல நிலையில் இருக்கும் போதே கர்த்தர் அவரை எடுத்துக்கொண்டது ஒரு ஆசிர்வாதம். இவர் நல்ல வேத பண்டிதர். 1965ம் வருடம் முதலே **வருகையின் தூதன்** பத்திரிகை ஆசிரியரின் மூத்த மகன் சகோ. **DT. ராஜா.** அவர்கள் ஏற்பாடு செய்த பல கண்வென்ஷன்களில் நான் பிரசங்கிக்கும்போது சகோ Y.JOHNS அவர்களும் பகலில் வேத பாடம் நடத்துவார். பல இடங்களில் **கண்வென்ஷன் பிரசங்கியாராக** பயன்படுத்தப்பட்டவர். வேத புத்தகத்தின் பல சந்தேகங்களை நானும் சகோ. **Y. ஜோன்ஸ்** அவர்களும் அடிக்கடி பகிர்ந்து கொள்ளுவோம். அவருடைய மனைவி Mrs. குமுதா ஜோன்ஸ் அவர்களுக்கும் சகோ. Y. ஜோன்ஸ் அவர்களுக்கும் 5 பிள்ளைகள் உண்டு. அவர்களின் ஆறுதலுக்காக ஜெபித்துக்கொள்வோம்.

**APRIL-2021**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.